கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:26.01.2024

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
## 75வது குடியரசு தின விழா

ஜனவரி 26, 2024 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 75வது குடியரசு தின விழா சிறப்பாக கொண்டப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து குடியரசு தின உரையாற்றினார்.

துணைவேந்தர் தனது 75வது குடியரசு தின உரையில், "**வளர்ந்த இந்தியா மற்றும் ஜனநாயகத்தின் தாய்** " என்ற குடியுரசு தின கருப்பொருளை சுட்டிக்காட்டினார் . விவசாய வளர்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு மற்றும் சாதனைகளை எடுத்துரைத்தார். இதில் விவசாயிகளுக்கு கிராம அளவிலான "**வானிலை ஆலோசனை** " மற்றும் "**ஒரு விவசாயி ஒரு மாணவர் திட்டம்** " ஆகியவற்றின் அறிமுகம் குறித்து கூறினார் . இவ்வாண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 24 இரகங்கள், 10 தொழில்நுட்பங்கள் மற்றும் 9 வேளாண் தொழில்நுட்ப கருவிகளை வெளியிடயுள்ளது என்பதை தெரிவித்தார். இந்திய அளவில் உள்ள மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை "Times Higher Education" என்ற உலக தரவரிசை பட்டியலில் இடம்பெற செய்தமைக்காக பேராசிரியர்கள் மற்றும் விஞ்ஞானிகளை பெருமிதத்தோடு பாராட்டினார் . தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , "ICAR Best Centre Award" பெற்றமைக்காகவும், மாணவர்கள் தங்கள் திறமைக்கேற்ற வேலைவாய்ப்புகளை பல்வேறு இடங்களில் பெற்றதற்காகவும்

தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் , பாராட்டுக்களையும் தெரிவித்தார் . முதன்முறையாக அனைத்து முதுகலை மற்றும் முனைவர் பட்டத்திற்கு நூறு சதவீதம் நிதி உதவியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது என்று அறிவித்தார்.

பல்கலைக்கழக அலுவலர்கள், விஞ்ஞானிகள், பணியாளர்கள், தேசிய மாணவர்படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் இக் குடியரசு தின விழாவில் பங்கேற்றனர்.

.

***மக்கள் தொடர்பு அலுவலர்***